18.02.2026

O.S.No. 118/2014

PW1- சுடலையாண்டி – த/பெ. திருமலை

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.02.2026

குறுக்குவிசாரணை (வாதி/பிரதிவாதி தரப்பில்)

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையொப்பம் மட்டுமே செய்யதெரியும். வழக்கு தாக்கல் செய்யவிவரங்கள் நான்தான் கூறினேன். எனக்கு எதிருரையில் பிரதிவாதிகள் கூறிய விவரங்கள் தெரியும். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

2. வழக்கு சொத்து எனது தந்தைக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

3. பாகப்பரிவினை ஆவணத்தில் அசல் என்கைவசம் தான்உள்ளது என்றால் சரிதான். இந்நீதிமன்றம் வா.சா.ஆ.1 ஆவணத்தை எடுத்து பார்க்கையில் அது ஒளிநகல் என்று தெரியவருகிறது.

4. அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததறகான எந்த காரணமும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது எனக்கு படிக்க தெரியாது. ஆனால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தந்தை பெயர் உள்ளது. எனது தந்தையின் பெயர் திருமலை வேளாளர். வா.சா.ஆ.1 ஆவணத்தில் திருமலை வேளாளருக்கு 3ம் அயிடட சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்தின் புல எண்.442/1 என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வடபுற எல்லை தான் தாவா என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 5ல் 6வது வரியில் வடபக்க எல்கையாக தெருவுக்கும் தெற்கு என்பதை அடித்து சண்முகவேளாளர் மனை வீட்டிற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக அசல் ஆவணங்களில் அடித்தல், திருத்தல் இருந்தால் அசல் ஆவணத்தில் கடைசி வரியில் அது எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த திருத்தல் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக அசல் ஆவணத்தை திருத்தி அதன்ஒளிநகலை மட்டும் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையே இதுதான் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக அசல் ஆவணங்களை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்து 10 ஆண்டுகள் ஆகிறது. எனது தந்தைக்கு 5 வாரிசுகள் உண்டு. எனது தந்தை இறபபிற்கு பிறகு அவரது வாரிசுகள் அனைவருக்கும் சரிசமமான பங்கு உண்டு என்றால் சரிதான்.

5. எனது தந்தை இறக்கும் சமயத்தில் பிராது தபசில சொத்தின் மதிப்பு சுமார் 10 லட்சம் இருக்கும். நான் எனது தந்தை மற்ற வாரிசுகளிடமிருந்து எழுத்து பூர்வமாக எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாக விடுதலை ஆவணம் பற்றி பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது தந்தையின் வாரிசுகள் எனக்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார்கள் என்றால சரிதான். எனது பிராதிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ வாய்மொழி பாக பிரிவினை என்று

கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் பிராது தபசில் சொத்து இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்கக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தின் பழைய கதவு 7 மற்றும் 7 ஏ, புதிய கதவு எண்.13 மற்றும் 25 ஆகும். மேற்படி விவரத்தை பிராது சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை வீட்டுவரி அனைத்தும் எனது தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் 29.09.2014 ஆம் தேதியில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீது என்றால் சரிதான். மேலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். தற்போது வரை மின்இணைப்பு எனது தந்தையின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தின் இதுநாள்வரை எனது தந்தையின் பெயரில் இருப்பதற்கு காரணம் எனது தந்தையின் பிற வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தின் தற்போதைய சர்வே எண் ஞாபகம் இல்லை.

6. வழக்கு சொத்திற்கு 3 புலஎண்கள் உள்ளது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு இடம் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது எனது சொத்தின் தென்வடல் 66, கிழமேல் 36 அடி ஆகும்.

7. சர்வே எண்.443/6 ஏ எனது பெயரிலோ, எனது தந்தையின் பெயரிலோ ஏதாவது வருவாய் ஆவணம் உள்ளதா என்றால் எனது தந்தையின் பெயரில் வருவாய் ஆவணம் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8 . சர்வே எண்.442/2 தான் 443/6 ஏ, 443/7 பி, 4443/7 சி ஆக உட்பிரிவு

செய்யப்பட்டுள்ளது என்று சொல்ல ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. மேற்படி கதவு எண்கள் கொண்ட வீடு புதிய சர்வே எண்ணில் உள்ளது என்று எண்ணால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். எனக்கு பழைய கதவு எண் தான் தெரியும்.

10. வா.சா.ஆ.5 ஆவணம் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் யாரால் எப்போது எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள புகைப்படம் எனது சிறிய வயதில் பழைய கேமராவால் எடுக்கப்பட்டது.

11. வா.சா.ஆ.5 ஆவணம் புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் சாட்சி மேற்படி புகைப்படத்தை வாங்கி பார்த்து அதில் உள்ள நபர் எனது அக்காவின் மகன் திருமலைக்குமார் என்று கூறினார். எனது அக்கா வா.சா.ஆ.5 ஆவணம் புகைப்படம் உள்ள வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல. விடுமுறைக்காக வந்தார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள எனது இருசக்கர வாகனம் அது யாருடையத என்றால் என்னுடையதுதான் அதன் பதிவு எண் தெரியாது.

12. வா.சா.ஆ.5 ஆவணம் இரண்டாம் புகைப்படத்தில் உள்ள இடத்தை பொருத்துதான் தாவா என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.2 ஆவணம் புகைப்படத்தில் உள்ள கட்டிடங்கள எதுவும் நிரந்தரமானது இல்லை என்றால் சரியல்ல. அதில் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட் அமைத்து 40 ஆண்டுகள் ஆகிறது. அதில் நிரந்தர கட்டிடம் உள்ளது.

14. நான் 2014 ம் ஆண்டு இறுதியில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் 2 ம் பிரதிவாதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதனல் தான் 2 ம் பிரதிவாதி என் மீது புகார் கெடுத்தார் என்றால் சரியல்ல.

பிராது தபசில் சொத்து ஆரம்பித்திலிருநதே எனது அனுபவத்தில் இருந்து வருகிறது.

15. வா.சா.ஆ.7 நான் 3 நபர்கள் மீது கொடுத்த புகார் மனு அந்த புகார் மனு மீது காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு மனு ஏற்பு ரசீது என்றால் சரிதான். இது வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.7 ஆவணத்தில் ரூபாய் 3 ஆயிரம் மதிப்புள்ள மரங்களை வெட்டி எடுத்ததுதான் காரணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் மரம் இருப்பது துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1ம் புகைப்படத்தில் உள்ள மரம் தான் அந்த மரம். மேற்படி மரம் எதற்கு பயன்படும் என்றால் தெரியாது. அப்படி ஒரு மரமே வழக்கு சொத்தில் கிடையாது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மரம் இருந்தது.

17. வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் பிராது வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்தை பார்வையிட்டபோது நானும், எனது வழக்கறிஞரும் இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் எனக்கு முறையான அறிவிப்பு செய்துதான் வந்தார் என்றால் சரியல்ல.

18 நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்த்தேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் மறுப்பு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

19. நான் தான் ஆணையர் ஸ்தல பார்வை செய்ய மனு செய்தேன் என்றால் சரிதான். ஆணையர் ஸ்தல பார்வை செய்யும்போது நான் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில்

நாங்கள் வெளியுரில் இருநதோம். அதனால் ஆணையரால் முழு வீட்டையும் அளந்து பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரிதான்.

20 அதற்கு பிறகாவது ஆணையர் முழு வீட்டையும் அளக்க மனு செய்தேனா என்றால் மனு செய்துள்ளோம். ஆனையர் முழு வீட்டையும் அளந்தால் உண்மை தெரியவரும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை.

21. ஆணையர் அறி'கையில் ஆழ்துளாய் கிணறு உள்ள விவரம் தெரியாது என்றால் சரியல்ல. பிராது தபசில் செத்தில் ஆழ்துளாய் கிணறு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இலஞ்சி கிராமத்தில் மண்பாண்ட கூட்டுறவு தொழிலாளர்களுக்கு என தனி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான. மேற்படி இடத்தில் மண்பாண்ட தொழிலாள்ரகளுக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மண்பாண்ட தொழிலாளர்களுக்கு அடையாள எண் உள்ளது என்றால் சரிதான். மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மண்பாண்டம் தொழில் செய்ய உரிமம் வேண்டும் என்றால் சரியல்ல. மண்பாண்ட தொழில் செய்ய மின்சார வசதி தேவைப்படுகிறது என்றால் சரியல்ல. நானும், எனது தந்தையும் மண்பாண்ட தொழில் செய்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குடிசை தொழிலாக செய்துவந்தேன்.

22. பிராது தபசில் சொத்தில் வணிக ரீதியான மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். வீட்டிற்கு பயன்படும் மின் இணைப்பு தான் பயன்படுத்தினேன். நான் வணிரீதியான மின்சாரம் பெறாததால் என் மீது மின்சார துறை நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சரியல்ல. நானோ, எனது தந்தையோ மண்பாண்ட தொழில் செய்து வரவில்லை என்றால் சரியல்ல.

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

23 பிராது 2ம் தபசில் சொத்து என்பது பொது நடைபாதை என்றால் சரியல்ல. அதே போல் அது வா.சா.ஆ.2 ஆவணத்திலும் அது பொது நடைபாதையாகத்தான் குறிப்பிட்டுள்ள து என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்து 2ம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் 2ம் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2ம் தபசில் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிகோரியுள்ள எதிரிடை கோரிக்கை கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. எனது கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai